# ஐயமும் தெளிவும்

***ஐயம் :*** ஒருவர் குர்ஆனை அவர் மொழியில் ஓதி விளங்கி அமல் செய்கிறார். அரபி மொழியில் பார்த்து ஓதத் தெரியாது. இதற்கு தண்டனை உண்டா? குர்ஆனை அரபி மொழியில் ஓதத் தெரியாதவருக்கு தண்டனை உண்டென ஒரு சிலர் வாதிடுகின்றனர். குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் விபரம் தரவும்.

*ஜாவித் அலீ, ஆத்தூர்*

***தெளிவு :*** **"அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆய்வதற்காகவும், அறிவுடையோர் இதை நினைத்து நல்லுணர்வு பெறுவதற்காகவும் பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை (நபியே!) உம்மீது இறக்கினோம்".** *அல்குர்ஆன் 38:29*

> "மக்கள் இதைக்கொண்டு எச்சரிக்கப்படுவதற் காகவும் .... அறிவுடையோர் உபதேசமு(ம் நல்லுணர்வு)ம் பெறுவதற்காகவும் (அல்லாஹ் அறிவித்த) நல்லறிவிப்பாகும்". *அல்குர்ஆன் 14:52*

இவ்வசனங்கள் மூலம் **'குர்ஆன்'** நமக்கு அல்லாஹ் அளிக்கும் நல்லுணர்வாகவும், அறிவு, பொக்கிஷமாகவும், (பாவ எண்ணம் வருகையில்) எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளது என்பதை அறியலாம்.

இப்படிப்பட்ட அறிவுப் பெட்டகத்தை அல்லாஹ்விடமிருந்து வஹி மூலம் பெற்று வழங்கிய நபி(ஸல்) அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத **'உம்மீ'** என்பதை அக்குர்ஆனே 7:157,158 வசனங்களில் தெளிவாக்குகிறது, மேலும் அந்த **'உம்மீ'** நபி(ஸல்) அவர்கள் வந்த கூட்டத்தைப் பற்றி விமர்சிக்கையில் கீழ்வரும்படி கூறுகிறான் அல்லாஹ்,

> **"அவன்தான், எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான்".** *அல்குர்ஆன் 62:2*

நபி(ஸல்) அவர்களின் தோழர்களையும் கணக்கிட்டால், லட்சக்கணக்கானவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவினரே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். பெரும்பான்மையினர் எழுதப்படிக்கத் தெரியாதவர் (உம்மீ)களாக இருந்தனர் என்பது சரித்திரச் சான்றாகும். அதனையே மேலே கண்ட குர்ஆன் வசனமும் படம் பிடித்துக் காட்டுகிறது. பிலால்(ரழி) போன்ற பெரும் ஸஹாபிகளுக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. அரபி மொழியில் குர்ஆனைப் பார்த்து ஓதத் தெரியாது. எல்லாம் அவர்கள் செவிவழியில் கேட்டு விளங்கியவையாகும். மனனம் செய்ததாகும். நீங்கள் குறிப்பிடும் ஒருசிலரின் வரட்டு வாதத்தின்படி நபிதோழர்களில் பெரும்பான்மையினருக்கு குர்ஆனை அரபி மொழியில் பார்த்து ஓதத் தெரியாது. எனவே அவர்களுக்கு தண்டனை உண்டு என்கிறீர்களா?

குர்ஆனை எந்த மொழியிலும் ஓதியோ அல்லது கேட்டோ அதன் கருத்தினை விளங்கிச் செயல்படுவதே சாலச் சிறப்பாகும். அதனையே அல்லாஹ் விரும்புகிறான். அதற்கே குர்ஆன், இறக்கப்பட்ட நல்லறிவிப்பு என்பதையும் மேற்கண்ட (38:29, 14:52) வசனங்களில் கண்டோம்.

அரபி மொழியில் பார்த்து ஓதத் தெரியாவிட்டால் தண்டனை கிடைக்குமென வாதிடுவதெல்லாம் குர்ஆனையும், ஹதீஸ் வழிமுறைகளையும் செவ்வனே அறியாதவர்களின் விதண்டாவாதமாகும். அவர்களது சரித்திர அறிவின்மையையும் காட்டுகிறது.

ஆனால் தினசரி ஐவேளைத் தொழுகை போன்ற வணக்கங்களில் குர்ஆன் வசனங்களை, திக்ரு, தஸ்பீஹ்களை அரபியில் ஓதவேண்டுமென நபி(ஸல்) அவர்கள் கட்டளை இட்டு இருப்பதால், அவைகளை நாம் அரபியில் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். தேவையான சூராக்களை பிலால்(ரழி) போல நாமும் செவி வழியாகக் கற்றுக்கொண்டாலும் போதுமானது. அரபி மொழியில் பார்த்துத்தான் ஓதிக் கற்கவேண்டுமென்பது கட்டாயக் கடமையில்லை. அல்லாஹ் மிக அறிந்தவன்.

அந்நஜாத்